# திருநெல்வேலி மாநகராட்சி

## 2019ம் ஆண்டு டிசம்பர் மாதம் 30ம் நாள் திங்கட்கிழமை காலை 11.00 மணிக்கு திருநெல்வேலி மாநகராட்சி வ.உ.சி. கட்டிடத்தில் வைத்து நடைபெற்ற மாமன்ற அவசர கூட்ட நடவடிக்கைகள்

1) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் வார்டு எண் 17, வ.உ.சி.நகர் மக்கள் நலச்சங்கம் சார்பாக வரப்பெற்ற மனுவில் கேட்டுள்ள ஜெயந்தி நகர் கிழக்கு, வ.உ.சி.நகர் கிழக்கு, ஜெயந்தி நகர் வடகிழக்கு, வ.உ.சி.நகர் இ காலனி, வ.உ.சி. நகர் "F" காலனி, வ.உ.சி.நகர் சி2 காலனி, வள்ளலார்நகர், வ.உ.சி.நகர் ஏ காலனி ஆகிய தெருக்களில் வீடுகள் நிறைந்த பகுதியில் 31 மின்கம்பம் உள்ளன. இப்பகுதியில் தெருவிளக்கு லைன் அமைத்து 20 W LED 31 எண்ணம் அமைத்திட மின்வாரிய செலவு மற்றும் மின்விளக்கு பொறுத்த உத்தேச செலவினம் ரூ.6,00,000/– (ஆறு லட்சம்) நிர்வாக மற்றும் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் வார்டு எண் 17, வ.உ.சி.நகர் மக்கள் நலச்சங்கம் சார்பாக வரப்பெற்ற மனுவில் கேட்டுள்ள ஜெயந்தி நகர் கிழக்கு, வ.உ.சி.நகர் கிழக்கு, ஜெயந்தி நகர் வடகிழக்கு, வ.உ.சி.நகர் இ காலனி, வ.உ.சி. நகர் "F" காலனி, வ.உ.சி.நகர் சி2 காலனி, வள்ளலார்நகர், வ.உ.சி.நகர் ஏ காலனி ஆகிய தெருக்களில் வீடுகள் நிறைந்த பகுதியில் 31 மின்கம்பம் உள்ளன. இப்பகுதியில் தெருவிளக்கு லைன் அமைத்து 20 W LED 31 எண்ணம் அமைத்திட மின்வாரிய செலவு மற்றும் மின்விளக்கு பொறுத்த உத்தேச செலவினம் ரூ.6,00,000/– (ஆறு லட்சம்) நிர்வாக மற்றும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 106

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ2/45661/2019–பாளை)

---

2) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் வார்டு எண் 17, வ.உ.சி.நகர் மக்கள் நலச்சங்கம் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாம் மனுவில் கேட்டுள்ளபடி வ.உ.சி.நகர் கிழக்கு, வ.உ.சி.நகர் D காலனி, வ.உ.சி. நகர் "F" காலனி, வள்ளலார்நகர், வ.உ.சி.நகர் ஏ காலனி, வ.உ.சி. நகர் பி காலனி, ஓயாசிஸ் பள்ளி மெயின் ரோடு ஆகிய தெருக்களில் மொத்தம் 45 மின்கம்பம் தெருவிளக்கு லைன் மட்டும் ஏற்கனவே அமைந்துள்ளது. அதில் 20 W LED 40 எண்ணமும், OASIS பள்ளி மெயின் ரோட்டில் 90 W LED 5 எண்ணமும் அமைத்திட உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சம் நிர்வாக மற்றும் மாமன்ற பார்வைக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலம் வார்டு எண் 17, வ.உ.சி.நகர் மக்கள் நலச்சங்கம் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களின் மக்கள் குறை தீர்க்கும் சிறப்பு முகாம் மனுவில் கேட்டுள்ளபடி வ.உ.சி.நகர் கிழக்கு, வ.உ.சி.நகர் D காலனி, வ.உ.சி. நகர் "F" காலனி, வள்ளலார்நகர், வ.உ.சி.நகர் ஏ காலனி, வ.உ.சி. நகர் பி காலனி, ஓயாசிஸ் பள்ளி மெயின் ரோடு ஆகிய தெருக்களில் மொத்தம் 45 மின்கம்பங்களில் விளக்கு லைன் மட்டும் ஏற்கனவே அமைந்துள்ளது. அதில் 20 W LED 40 எண்ணமும், OASIS பள்ளி மெயின் ரோட்டில் 90 W LED 5 எண்ணமும் அமைத்திட உத்தேச செலவினம் ரூ.3.00 லட்சம் நிர்வாக மற்றும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 107

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/5327/2019–பாளை)

---

3) திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 50 பேட்டை – பழையபேட்டை இணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தில், முனையத்தில் இருந்து சாலை வரை மழைநீர் வடிந்து செல்ல ஏதுவாக மழைநீர் வடிகால் அமைத்தல், முனையத்தின் உள்ளே வரும் லாரிகளை தடுத்து நிறுத்தி உரிய கட்டணங்கள் வசூல் செய்ய ஏதுவாக முனையத்தின் நுழைவு வாயிலில் தானியங்கி தடுப்புகள் அமைத்தல் மற்றும் ஓட்டுநர்கள் தங்குமிடத்தில் உள்ள கட்டிடத்தின் முன்பக்கம் மரக்கதவுகள் அமைத்தல் போன்ற பணிகளை அவசர, அவசியம் கருதி மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.34.50 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, வார்டு எண் 50, பேட்டை–பழையபேட்டை இணைப்புச் சாலையில் புதிதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தில் மழைநீர் வடிகால் அமைத்தல், சரக்கு வாகன முனையத்தின் நுழைவு வாயிலில் தானியங்கி தடுப்புகள் அமைத்தல் போன்ற பணிகளை அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.34.50 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 108

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 62/2019–20)

---

4) திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 50 பேட்டை – பழையபேட்டை இணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தின் முன்பக்கத்தில் வாயில்கள் இரண்டு எண்ணம், லாரிகள் செல்லும் ஓடுதளத்தினை வெளியில் பாதுகாவலர் அறை வரை அமைத்தல், சரக்கு வாகன முனையத்தின் உள்ளே மற்றும் வெளியே செல்லும் இடத்திற்கு வரும் வாகனத்திற்கு உரிய கட்டணங்கள் வசூல் செய்ய ஏதுவாக உரிய பாதுகாவலர் அறை அமைத்தல் போன்ற பணிகளை அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. எனவே, அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்படி பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.46.70 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, வார்டு எண் 50 பேட்டை – பழையபேட்டை இணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தின் முன்பக்கத்தில் நுழைவு வாயில்கள் இரண்டு எண்ணம், லாரிகள் செல்லும் ஓடுதளத்தினை வெளியில் பாதுகாவலர் அறை வரை அமைத்தல், சரக்கு வாகன முனையத்தின் உள்ளே மற்றும் வெளியே செல்லும் இடத்திற்கு வரும் வாகனத்திற்கு உரிய கட்டணங்கள் வசூல் செய்ய ஏதுவாக உரிய பாதுகாவலர் அறை அமைத்தல் போன்ற பணிகளை அவசியமாக மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.46.70 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 109

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ம.எண்.61/2019–20)

---

5) திருநெல்வேலி மாநகராட்சி வார்டு எண் 50, பேட்டை – பழையபேட்டை இணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதிதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தின் உள்ளே உள்ள பிளாட்பாரம் 1ன் மேல்பகுதியில் சிமிண்ட் கான்கிரீட் தள ஓடுகள் (Tiles) பதிக்கும் பணி செய்தல், சரக்கு வாகன முனையத்தின் உள்ளே அமைந்துள்ள தங்குமிட கட்டிடம் மற்றும் புதியதாக கட்டப்பட்டுள்ள மூன்று எண்ணம் கழிப்பிடங்களின் பின்புறம் கழிவுநீர் நச்சுத் தொட்டி (Septic Tank) அமைத்தல் போன்ற பணிகளை அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொதுநிதியின் கீழ் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதற்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.48.00 இலட்சத்திற்கு மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, வார்டு எண் 50, பேட்டை–பழையபேட்டை இணைப்புச் சாலையில் புதிதாக அமைக்கப்பட்டு வரும் சரக்கு வாகன முனையத்தின் உள்ளே உள்ள பிளாட்பாரம் 1ன் மேல் பகுதியில் சிமிண்ட் கான்கிரீட் தள ஓடுகள் (Tiles) பதிக்கும் பணி செய்தல், சரக்கு வாகன முனையத்தின் உள்ளே அமைந்துள்ள தங்குமிட கட்டிடம் மற்றும் புதிதாக கட்டப்பட்டுள்ள மூன்று எண்ணம் கழிப்பிடங்களின் பின்புறம் கழிவுநீர் நச்சுத் தொட்டி (Septic Tank) அமைத்தல் போன்ற பணிகளை அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.48.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 110

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 60/2019–20)

---

6) திருநெல்வேலி மாநகராட்சி, வார்டு எண் 50, பேட்டை–பழையபேட்டை இணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதியதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தின் உள்ளே உள்ள பிளாட்பாரம் 1–ன் தென்பகுதியில் பேக்கரி, வல்கனைசிங் கடை, செல்போன் கடை, டீ கடை மற்றும் மோட்டார் Spare parts கடை என 5 எண்ணம் கடைகளும், வடக்கு பகுதியிலும் அதே போன்று 5 எண்ணம் கடைகளும் கட்ட நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்கள் ஆய்வின்போது அறிவுரை வழங்கியதின்படி மேற்படி கடைகள் கட்டும் பணியின் அவசர அவசியம் கருதி மாநகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கண்ட பணிகளை மேற்கொள்வதறகு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.33.00 இலட்சதிற்கு மாமன்ற அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்ட விபரப்படி வார்டு எண் 50 பேட்டை–பழையபேட்டைஇணைப்புச் சாலையில் சீர்மிகு நகர திட்டத்தின் கீழ் சரக்கு வாகன முனையம் அமைக்கும் பணி நடைபெற்று வருகின்றது. மேற்படி புதியதாக அமைக்கப்படும் சரக்கு வாகன முனையத்தின் உள்ளே உள்ள பிளாட்பாரம் 1ன் தென்பகுதியில் பேக்கரி, வல்கனைசிங் கடை, செல்போன் கடை, டீ கடை மற்றும் மோட்டார் Spare parts கடை என 5 எண்ணம் கடைகளும், வடக்கு பகுதியிலும் அதைபோன்று 5 எண்ணம் கடைகளும் கட்ட நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்கள் ஆய்வின்போது அறிவுரை வழங்கியதின்படி மேற்படி கடைகள் கட்டும் பணி அவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால், தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.33.00 இலட்சத்திற்கு மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 111

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(மதிப்பீடு எண் 87/2019–20)

---

7) திருநெல்வேலி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், இராமையன்பட்டி உரக்கிடங்கில் 36.50 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள 2.02 லட்சம் கனமீட்டர் பழைய குப்பைகளை விஞ்ஞான முறையில் மூடாக்கம் (Scientific Closure) செய்யும் பணிகள் ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் 31.05.2017ல் செய்து முடிக்கப்பட்டது. அதன்பின்னர், ஒப்பந்த நிபந்தனைகளின்படி மேற்படி திட்டப் பணியினை செய்து முடித்த Zonta Infratech நிறுவனம் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு 01.06.2017 முதல் 31.05.2019 முடிய வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி பராமரிப்புக் காலம் 31.5.2019ல் முடிவடைந்ததால், இம்மாநகராட்சியில் பராமரிப்பு பணிகளை மேற்கொள்வதற்கு போதுமான பணியாளர்கள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டு தனியார் நிறுவனம் மூலம் மேலும் இரண்டு ஆண்டுகளுக்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், மாண்புமிகு உச்சநீதிமன்றத்தின் ஆணையின்படி இயற்றப்பட்ட நகராட்சி திடக்கழிவுகள் (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ன்படி மேற்படி பராமரிப்பு பணிக்கான செலவுத் தொகை ரூ.98.00 இலட்சத்தினை மாநகராட்சி பொது நிதியில் இருந்து செலவினம் மேற்கொள்ளவும், புதிதாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடர நகராட்சி நிர்வாக ஆணையர் ஒப்புதல் பெறவும், அதுவரையில் ஏற்கனவே பராமரிப்பு பணி மேற்கொண்டு நிறுவனம் மூலம் தொடர்ந்து பராமரிப்பு பணியினை மேற்கொள்ளவும் மாமன்றம் தீர்மானம் எண் 188, நாள் 27.02.2019 ல் ஒப்புதல் பெறப்பட்டு கோப்பு நகராட்சி நிர்வாக ஆணையரகத்திற்கு அனுப்பப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகின்றது.

இந்நிலையில் மேற்படி செய்து முடிக்கப்பட்ட திட்டப்பணியின் அவசியம் கருதியும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் மற்றும் வசதிகள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும் உச்சநீதிமன்ற ஆணையின்படி இயற்றப்பட்ட நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாழுதல் விதிகள் 2000ன்படியும், மேற்படி வருடாந்திர பராமரிப்பு பணியினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவு பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு:

பொருளில் கண்ட விபரப்படி, திருநெல்வேலி மாநகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், இராமையன்பட்டி உரக்கிடங்கில் 36.50 ஏக்கர் நிலப்பரப்பில் உள்ள 2.02 லட்சம் கனமீட்டர் பழைய குப்பைகளை விஞ்ஞான முறையில் மூடாக்கம் (Scientific Closure) செய்யும் பணிகள் ரூ.8.06 கோடி மதிப்பீட்டில் 31.05.2017ல் செய்து முடிக்கப்பட்டது. அதன் பின்னர், ஒப்பந்த நிபந்தனைகளின்படி மேற்படி திட்டப் பணியினை செய்து முடித்த Zonta Infratech நிறுவனம் மூலம் இரண்டு ஆண்டுகளுக்கு 01.06.2017 முதல் 31.05.2019 முடிய வருடாந்திர பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி செய்து முடிக்கப்பட்ட திட்டப்பணியின் அவசியம் கருதியும், பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள போதுமான பணியாளர்கள் மற்றும் வசதிகள் இல்லாத நிலையினை கருத்தில் கொண்டும், உச்சநீதிமன்ற ஆணையின்படி இயற்றப்பட்ட நகராட்சி திடக்கழிவுகள் மேலாண்மை மற்றும் கையாழுதல் விதிகள் 2000ன்படியும், மேற்படி வருடாந்திர பராமரிப்பு பணியினை மாநகராட்சியின் பொது நிதியில் இருந்து ஒரு வருட காலத்திற்கு ரூ.49.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேல்நடவடிக்கை தொடரவும், ஒப்பந்தப்புள்ளி நடவடிக்கைகள் முடிவு பெறும் வரை ஏற்கனவே பராமரிப்பு பணியினை மேற்கொண்டு வரும் சம்பந்தப்பட்ட நிறுவனம் மூலம் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் மாமன்ற அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 112

திருத்திய மதீப்பீட்டுடன் மறு பொருள் வைக்கவும்

(ஒ.பு.அ.எண் 17/2019–20)

---

8) அரசாணை எண் 62, நிதித்துறை, நாள் 17.01.1994–ன்படி திருநெல்வேலி மாநகராட்சி உடன் நிகழ்தணிக்கை பிரிவில் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிறபடிகளின்படி செலவினத் தொகை 50% தணிக்கை கட்டணமாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் மாநகராட்சி தணிக்கை துணை இயக்குநர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடிதம் ப.வே.எண் அ1/245/2018, நாள் 27.08.2018–ன்படி 2017–2018 ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.32,12,537/– செலுத்த மாமன்றத் தீர்மானம் எண் 91, நாள் 12.10.2018–ல் அனுமதி பெற்று உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது. தற்போது துணை இயக்குநர், திருநெல்வேலி மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் கடிதம் ப.வெ.எண் அ1/245/2018, நாள் 09.03.2019–ன்படி 2017–2018–க்கான தணிக்கை கட்டணம் ரூ.32,22,044/– செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே ஏற்கனவே தணிக்கை கட்டணம் செலுத்திய தொகை ரூ.32,12,537/–போக வித்தியாசத் தொகை ரூ.9507/– மட்டும் உரிய அரசு கணக்கில் தற்போது செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு

பொருளில் கண்டுள்ளவாறு 2017–2018ஆம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ஏற்கனவே செலுத்தியது போக வித்தியாசத் தொகை ரூ.9507/– மட்டும் தற்போது உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 113

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் ப6/2612/2006)

---

9) அரசாணை எண் 62, நிதித் துறை, நாள் 17.01.994–ன்படி திருநெல்வேலி மாநகராட்சி உடன் நிகழ் தணிக்கை பிரிவில் அரசால் அனுமதிக்கப்பட்ட பணியிடங்களில் பணிபுரியும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பிறப்படிகளின் செலவினத் தொகை 50% தணிக்கை கட்டணமாக அரசுக்கு செலுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில் மாநகராட்சி தணிக்கை துணை இயக்குநர், திருநெல்வேலி மாநகராட்சி அவர்களின் கடிதம் ப.வே.எண் அ1/245/2019, நாள் 26.06.2019–ன்படி 2018–2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.33,70,821/– உரிய அரசு கணக்கில் தலைப்பில் செலுத்த தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட விபரப்படி 2018–2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.33,70,821/– மட்டும் உரிய அரசு தலைப்பில் செலுத்த மாமன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

பொருளில் கண்டுள்ளவாறு 2018–2019ம் ஆண்டிற்கான தணிக்கை கட்டணம் ரூ.33,70,821/– மட்டும் உரிய அரசு கணக்கு தலைப்பில் செலுத்த மாமன்றம் அனுமதிக்கலாம்

தீர்மானம் எண் 114

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் பி6/2612/2006)

---

10) திருநெல்வேலி மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019–2020–ன் கீழ் (1) வார்டு எண் 1, சிதம்பரநகர் வடக்குப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (2) வார்டு எண் 1, சிதம்பரநகர் தெற்கு பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (3) வார்டு எண் 1, நல்மேய்ப்பர் நகரில் தார்த்தளம் அமைத்தல் (4) வார்டு எண் 1, செல்வ விக்னேஷ் நகரில்

தார்த்தளம் அமைத்தல் (5) வார்டு எண் 1, செல்வ விக்னேஷ் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (6) வார்டு எண் 48, ஆர்.எம்.கே.விஸ்வநாத நகரில் தார்த்தளம் அமைத்தல் (7) வார்டு எண் 48, ரயில் நகரில் தார்த்தளம் அமைத்தல். (8) வார்டு எண் 50, சேக்மதார் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (9) வார்டு எண் 50, காந்திநகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் (10) வார்டு எண் 50, சி.எஸ்.எஸ்.நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள மொத்தம் ரூ.700.00 லட்சத்திற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை செயல்முறை ஆணை ந.க.எண் 17349/2019/E3, நாள் 16.10.2019–ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின்படியும், தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையர் அலுவலகம், சென்னை அவர்களின் ந.க.எண் 25039–23/2019/DO2 நாள் 24.10.2019–ன்படியும் மேற்படி பணிகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் 17/2018–19ன்படி 31.10.2019 அன்று மாநில ஒப்பந்தப்புள்ளி செய்தி மலரிலும், அகில இந்திய அளவில் The New Indian Express ஆங்கில நாளிதழிலும் மற்றும் மாநில அளவில் தினகரன் தமிழ் நாளிதழிலும் 02.11.2019–ல் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு பிரசுரம் செய்துள்ளதின்படி மேற்படி பணிகளுக்கு மின்னணு மற்றும் மூடிமுத்திரையிடப்பட்ட இரு உறை முறையிலான ஒப்பந்தப்புள்ளிகள் பெறுவதற்கு 05.12.2019 –ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு மின்னணு முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் ஏதும் வரப்பெறவில்லை. மின்னணு முறை அல்லாத இரு உறை முறையிலான மூடி முத்திரையிடப்பட்ட ஒப்பந்தப்புள்ளி பெட்டியில் 4 எண்ணம் ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதில் இம்மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழுவால் தொழில்நுட்ப தகுதிகள் கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் (1) திரு.I.கணபதி அவர்களது ஒப்பந்தப்புள்ளி தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்யாததால் தகுதியிழந்ததாக கருதப்பட்டு நிராகரிக்கப்பட்டது. மீதமுள்ள (2) திரு.T.பாலசுப்பிரமணியன் (3) M/s.NHA Associates மற்றும் (4) M/s.Vignesh & Co., ஆகியோரது ஒப்பந்தப்புள்ளிகள் தொழில் நுட்ப தகுதி தொடர்பான ஒப்பந்தப்புள்ளி நிபந்தனைகளை பூர்த்தி செய்வதால் அன்னார்களுடைய விலைப்புள்ளி அட்டவணைகள் மட்டும் 16.12.2019 அன்று திறக்கப்பட்டு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு அதன் விபரம் வருமாறு:–

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ. | சதவீகிதம் % |
|---|---|---|---|---|
| 1 | திரு.T.பாலசுப்பிரமணியன் | 6,68,74,604/– | 7,01,96,052/– | மதிப்பீட்டை விட 4.97% அதிகம் |
| 2 | M/s.Vignesh & Co., | | 7,25,91,842/– | மதிப்பீட்டை விட 8.55% அதிகம் |
| 3 | M/s.NHA Associates | | 7,05,47,406/– | மதிப்பீட்டை விட 5.49% அதிகம் |

ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களின் விலைவிகிதம் மதிப்பீட்டைவிட 4.97% அதிகமானதாக உள்ளதால், அது ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரிடம் விலைக்குறைப்பு செய்ய முடிவு செய்து அதன்படி ஒப்பந்ததாரருக்கு 16.12.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 18.12.2019ம் தேதிய கடிதத்தில் தற்போது சாலை அமைக்க தேவையான பொருட்கள் எரிபொருள் மற்றும் பணியாளர்கள் கூலி அதிகமாக இருப்பதால் என்னால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என தெரிவித்துள்ளார். இருப்பினும் ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக்குழு ஒப்பந்தக்காரர் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்கள் விலைப்புள்ளி அட்டவணையில் கொடுத்த மதிப்பீட்டை விட 4.97% அதிகமான விலைவிகிதம் ஏற்கத்தக்கதல்ல என கருதி ஒப்பந்ததாரரிடம் மீண்டும் விலைக்குறைப்பு செய்ய முடிவு செய்து அதன்படி ஒப்பந்ததாரருக்கு 18.12.2019 அன்று கடிதம் அனுப்பப்பட்டது. அதன் பின்னர் ஒப்பந்ததாரர் தமது 24.12.2019 ம் தேதிய கடிதத்தில் தற்போது சாலை அமைக்க தேவையான பொருட்கள் எரிபொருள் மற்றும் பணியாளர்கள் கூலி அதிகமாக இருப்பதால் என்னால் மேலும் விலைக்குறைப்பு செய்ய இயலாது என இறுதியாகவும் முடிவாகவும் தெரிவித்துள்ளார்.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | துறையின் மதிப்பு ரூ. | விலைக் குறைப்பிற்கு பின் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களின் ஒப்பந்தமதிப்பு.. |
|---|---|---|---|
| 1 | (1) வார்டு எண் 1 சிதம்பரநகர் வடக்குப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (2) வார்டு எண் 1 சிதம்பரநகர் தெற்கு பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (3) வார்டு எண் 1 நல்மேய்ப்பர் நகரில் தார்த்தளம் அமைத்தல் (4) வார்டு எண் 1 செல்வ விக்னேஷ் நகரில் தார்த்தளம் அமைத்தல் (5) வார்டு எண் 1 செல்வ விக்னேஷ் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (6) வார்டு எண் 48 ஆர்.எம்.கே. விஸ்வநாத நகரில் தார்த்தளம் அமைத்தல் (7) வார்டு எண் 48 ரயில் நகரில் தார்த்தளம் அமைத்தல். (8) வார்டு எண் 50 சேக்மதார் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (9) வார்டு எண் 50 காந்திநகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் (10) வார்டு எண் 50 சி.எஸ்.எஸ்.நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் | ரூ.6,68,74,604/– | ரூ.7,01,96,052/– மதிப்பீட்டை விட 4.97% அதிகம் |

எனவே, 24.12.2019 –ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட நடவடிக்கையில் மேற்படி பணிக்கான மதிப்பீடு 2019–20–ம் வருடத்திய தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறையினரால் வெளியிடப்பட்ட விலை விபர அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாலும், தற்போது எரிபொருட்களுக்கான விலை எதிர்பாராத விதமாக அதிகமாக உள்ளதாலும் அதன் காரணமாக சாலை அமைக்க தேவையான பொருட்களின் விலை அதிகமாகிவிட்டதாலும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் மற்றும் திட்டப் பணியாக உள்ளதாலும் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களின் விலைப்புள்ளி அட்டவணையில் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.7,01,96,052/– மதிப்பீட்டை விட 4.97% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றத்தின் அனுமதிக்கும் முடிவிற்கும்.

அலுவலகக் குறிப்பு:

அ) திருநெல்வேலி மாநகராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2019–2020ன் கீழ் (1) வார்டு எண் 1, சிதம்பரநகர் வடக்குப் பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (2) வார்டு எண் 1, சிதம்பரநகர் தெற்கு பகுதியில் தார்த்தளம் அமைத்தல் (3) வார்டு எண் 1, நல்மேய்ப்பர் நகரில் தார்த்தளம் அமைத்தல் (4) வார்டு எண் 1, செல்வ விக்னேஷ் நகரில் தார்த்தளம் அமைத்தல் (5) வார்டு எண் 1, செல்வ விக்னேஷ் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (6) வார்டு எண் 48, ஆர்.எம்.கே. விஸ்வநாத நகரில் தார்த்தளம் அமைத்தல் (7) வார்டு எண் 48, ரயில் நகரில் தார்த்தளம் அமைத்தல் (8) வார்டு எண் 50, சேக்மதார் நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல். (9) வார்டு எண் 50, காந்திநகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் (10) வார்டு எண் 50, சி.எஸ்.எஸ்.நகர் குறுக்கு தெருக்களில் தார்த்தளம் அமைத்தல் போன்ற பணிகளை மேற்கொள்ள வேண்டியிருப்பதாலும், தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான பொறியியல் நடைமுறை நூல் தொகுப்பு–1, அத்தியாயம் 2, உட்பிரிவு 2.7.2–ன்படி ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பில் கூட மதிப்பீட்டை விட 5% வரை கூடுதலாக பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளை ஒப்புக் கொள்வதற்கு மாமன்றம் அனுமதிக்கலாம் என வழிவகை செய்யப்பட்டுள்ளதாலும், 24.12.2019–ம் தேதிய ஒப்பந்தப்புள்ளி கூர்ந்தாய்வுக் குழு கூட்ட

நடவடிக்கையில் மேற்படி பணிக்கான மதிப்பீடு 2019–20–ம் வருடத்திய தமிழக அரசு நெடுஞ்சாலைத் துறையினரால் வெளியிடப்பட்ட விலை விபர அட்டவணையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளதாலும், தற்போது எரிபொருட்களுக்கான விலை எதிர்பாராத விதமாக அதிகமாக உள்ளதாலும் அதன் காரணமாக சாலை அமைக்க தேவையான பொருட்களின் விலை அதிகமாகிவிட்டதாலும் காலதாமதத்தை தவிர்க்கும் பொருட்டும் மற்றும் திட்டப் பணியாக உள்ளதாலும் திரு.T.பாலசுப்பிரமணியன் அவர்களின் விலைப்புள்ளி அட்டவணையில் கொடுத்த ஒப்பந்தப்புள்ளி மதிப்பு ரூ.7,01,96,052/– மதிப்பீட்டை விட 4.97% கூடுதலான ஒப்பந்தப்புள்ளியை மாமன்றம் முடிவு செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளதின்படி மாமன்றம் ஒப்புக்கொண்டு அனுமதிக்கலாம்.

ஆ) மேலும், மேற்கண்ட பணிகளுக்கு அனுமதி அளித்துள்ள தொகையை விட ஏற்படும் கூடுதல் செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மாமன்றம் அனுமதி வழங்கலாம்

தீர்மானம் எண் 115

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ஒ.பு.அ.எண் 17/2019–20)

---

11) இம்மாநகராட்சிப் பகுதியில் உள்ள 4 மண்டல அலுவலகங்கள் மற்றும் சந்திப்பு பேருந்து நிலையம் மற்றும் புதிய பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை சுய உதவிக் குழுக்கள் மூலம் 645 நபர்கள் மாமன்றத் தீர்மானம் எண் 112, நாள் 29.10.2018–ன்படி அனுமதி வழங்கப்பட்டு பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மாமன்றத் தீர்மானம் எண் 83, நாள் 30.10.2019–ன்படி மேற்படி பணியாளர்களின் பணிக்காலம் 26.12.2019 தேதியுடன் முடிவடைகிறது. மேற்படி பணியாளர்களின் பணியின் அவசியத்தை முன்னிட்டு கீழ்க்கண்டுள்ள விபரப்படி 40 சுய உதவிகுழுக்கள் மூலம் 645 நபர்களை 29.12.2019 முதல் மேலும் 88 நாட்களுக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பணிபுரிய அனுமதிக்கவும், அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் பார்வைக்கும், முடிவுக்கும்

| வ. எண் | சுய உதவிக் குழுவின் பெயர் | உறுப்பினர் களின் எண்ணிக்கை | பணியில் ஈடுபடுத்தப் பட்டுள்ள வார்டு அலுவலகம் மற்றும் வார்டு |
|---|---|---|---|
| 1 | அக்னி சிறகுகள் சுகாதாரப் பணிக்குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 2 | அக்னி பறவைகள் சுகாதாரப் பணிக்குழு | 23 | திருநெல்வேலி வார்டு |
| 3 | தாமிரபரணி சுகாதாரப் பணிக்குழு | 20 | திருநெல்வேலி வார்டு |
| 4 | அருந்ததியர் சுகாதாரக் குழு | 25 | திருநெல்வேலி வார்டு |
| 5 | சாரா சுகாதார சுய உதவிக் குழு | 26 | திருநெல்வேலி வார்டு |
| 6 | வெண்ணிலா சுகாதாரப் பணிக்குழு | 23 | தச்சநல்லூர் மண்டலம் |
| 7 | பசுமை சுகாதாரப் பணிக்குழு | 12 | தச்சநல்லூர் மண்டலம் |
| 8 | ஸ்ரீ ஜெயம் சுகாதாரப் பணிக்குழு | 15 | தச்சநல்லூர் மண்டலம் |
| 9 | காந்திஜி சுகாதாரப் பணிக்குழு | 11 | தச்சநல்லூர் மண்டலம் |
| 10 | ஸ்ரீ பேராட்சி அம்மன் ஆண்கள் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 11 | ஸ்ரீ உலகம்மன் சுகாதாரப் பணிக்குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 12 | ஸ்ரீ முத்தாரம்மன் ஆண்கள் பணிக்குழு | 19 | தச்சநல்லூர் மண்டலம் |
| 13 | வடக்கத்தி மாரியம்மன் சுகாதாரக் குழு | 20 | தச்சநல்லூர் மண்டலம் |
| 14 | APJ அப்துல் கலாம் ஆண்கள் குழு | 10 | தச்சநல்லூர் மண்டலம் |
| 15 | ஸ்ரீ செல்வ விநாயகர் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 16 | ஸ்ரீ காளியம்மன் சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 17 | தந்தை பெரியார் சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |

| | | | |
|---|---|---|---|
| 18 | ஆதி சக்தி சுகாதாரப் பணிக்குழு | 13 | பாளை மண்டலம் |
| 19 | அன்னை இந்திரா மகளிர் சுயஉதவிக்குழு | 18 | பாளை மண்டலம் |
| 20 | டாக்டர் அம்பேத்கார் ஆண்கள் குழு | 23 | பாளை மண்டலம் |
| 21 | தளபதி ஒண்டிவீரன் சுயஉதவிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 22 | மகாராஜா ஆண்கள் சுயஉதவிக்குழு | 15 | பாளை மண்டலம் |
| 23 | ஓம்சக்தி சுகாதாரப் பணிக்குழு | 12 | பாளை மண்டலம் |
| 24 | முத்தாரம்மன் சுயஉதவிக்குழு | 10 | பாளை மண்டலம் |
| 25 | ஸ்ரீ அன்னை தெரசா சுயஉதவிக்குழு | 14 | பாளை மண்டலம் |
| 26 | நேருஜி ஆண்கள் சுகாதாரக் குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 27 | மங்களஈஸ்வரி பெண்கள் சுயஉதவிக்குழு | 21 | மேலப்பாளையம் மண்டலம் |
| 28 | பாரதி ஆண்கள் சுயஉதவிக்குழு | 19 | மேலப்பாளையம் மண்டலம் |
| 29 | செங்கை வாஞ்சிநாதன் சுகாதாரக் குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 30 | மங்கள விநாயகர் ஆண்கள் சுய உதவிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 31 | செந்தமிழ் மகளிர் சுயஉதவிக்குழு | 10 | மேலப்பாளையம் மண்டலம் |
| 32 | சுபாஷ் சந்திரபோஸ் சுகாதாரப் பணிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 33 | நேதாஜி சுய உதவிக்குழு | 14 | மேலப்பாளையம் மண்டலம் |
| 34 | செம்மொழி சுயஉதவிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 35 | அன்னை சத்தியா சுயஉதவிக்குழு | 15 | மேலப்பாளையம் மண்டலம் |
| 36 | அன்னை சந்தியா சுயஉதவிக்குழு | 12 | மேலப்பாளையம் மண்டலம் |
| 37 | திருப்பதி சுகாதாரக்குழு | 18 | மேலப்பாளையம் மண்டலம் |
| 38 | காளியம்மன் ஆண்கள் சுகாதாரப் பணிக்குழு | 17 | மேலப்பாளையம் மண்டலம் |
| 39 | தந்தை பெரியார் ஆண்கள் பணிக்குழு | 16 | மேலப்பாளையம் மண்டலம் |
| 40 | TMC 40 சுகாதார சிறப்பு பணிக்குழு | 12 | ராமயன்பட்டி உரக்கிடங்கு தச்சநல்லூர் மண்டலம் |
| | மொத்தம் | 645 | |

ஆ) மேலும் திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டல பகுதிகளில் 8 குடியிருப்போர் நலச்சங்கமும், பாளையங்கோட்டை மண்டல பகுதியில் 10 குடியிருப்போர் நலச்சங்கமும். மேலப்பாளையம் மண்டல பகுதியில் 14 குடியிருப்போர் நல சங்கங்களிலும் 10 ஆண்டுகளாக ஒப்பந்த அடிப்படையில் நலசங்கங்களின் மேற்பாா்வையாளாின் கீழ் துப்பரவு பணிகள் மேற்கொள்ளபட்டு வந்தது. தற்போது மேற்படி நலச்சங்கங்களுடன் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 01.01.2018 முதல் ரத்து செய்யப்பட்டு மாநகராட்சி மூலம் துப்புரவு பணி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இம்மாநகராட்சியில் பணியாற்றும் நிரந்தர துப்புரவு பணியாளர்களின் பற்றாக்குறையை கருத்தில் கொண்டு மண்டல சுகாதார அலுவலர்களால் தெரிவிக்கப்பட்ட துப்புரவு பணியாளர்களின் தேவைப்பட்டியலின்படி சுய உதவிக்குழு துப்புரவு பணியாளர்களை கொண்டு துப்புரவு பணி மேற்கொள்ள ஏதுவாக தச்சநல்லூர் மண்டலத்திற்கு 19 நபர்கள் கொண்ட ஒரு சுய உதவிக்குழுவும், பாளையங்கோட்டை மண்டலத்திற்கு 15 நபர்கள் கொண்ட இரண்டு சுய உதவிக்கு குழுவும், மேலப்பாளையம் மண்டலத்திற்கு 17 நபர்கள் மற்றும் 16 நபர்கள் கொண்ட இரண்டு சுயஉதவிக்குழுவும் ஏற்படுத்தி மேற்படி பணியாளர்கள் மூலம் திடக்கழிவு மேலாண்மை பணி 01.01.2018 முதல் 88 நாட்களுக்கு மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்ற தீர்மான எண் 13, நாள் 28.03.2018–ல் அனுமதி பெறப்பட்டு அதன்படி மேற்படி சுயஉதவிக்குழுக்கள் பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி பணியாளர்கள் பணிக்காலம் மாமன்ற தீர்மானம் எண் 84, நாள் 30.07.2019–ன் பிரகாரம் 20.12.2019 உடன் முடிவடைவதால் மேலும் 23.12.2019 முதல் 88 நாட்களுக்கு மேற்படி பணியாளர்களை பணியில் ஈடுபடுத்துவதற்கும் அதற்கான செலவினத்திற்கும் மாமன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகின்றது.

அலுவலகக் குறிப்பு:

உச்சநீதிமன்ற வழிகாட்டுதலின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள நகராட்சி திடக்கழிவு (மேலாண்மை மற்றும் கையாளுதல்) விதிகள் 2000–ஐ பின்பற்றி குப்பையினை வீடுவீடாகச் சென்று மக்கும் மற்றும் மக்காத குப்பையாகப் பிரித்து வாங்க வேண்டியது இன்றியமையாத ஒன்றாகும். இம்மாநகராட்சியிலுள்ள குறைந்த எண்ணிக்கையிலான துப்புரவுப் பணியாளர்களைக் கொண்டு மாநகரப் பகுதி முழுவதிலும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளை மேற்கொள்ள இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் இக்குழுக்களைச் சேர்ந்த நபர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/–என்ற அடிப்படையில் தொகை வழங்குவதால் மாநகராட்சிக்கு ஏற்படும் செலவினம் வெகுவாக குறைகின்றது. மேலும் அரசாணை எண் 69, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (ந.நி.3) துறை, நாள் 04.05.98ன் மூலம் தமிழ்நாட்டில் நகராட்சி சேவைப் பணிகளை தனியார் மயமாக்குதல் குறித்து வெளியிடப்பட்டுள்ள கொள்கைக் குறிப்பில், தனியார்மயமாக்கப்பட வேண்டிய சேவைப்பணிகளுள் திடக்கழிவு மேலாண்மையும் ஒன்று எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் நிரந்தர துப்புரவு பணியாளர்கள் பணியமர்த்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.1,25,00,000/– ஆகும். சுய உதவிக் குழுக்களை பணியில் ஈடுபடுத்தினால் செலவினம் மாதம் ஒன்றுக்கு ரூ.78,29,790/– ஆகும்.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் மேற்கண்ட 45 சுய உதவிக் குழுக்களை நபர் ஒருவருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.359/– என மாவட்ட ஆட்சித்தலைவரின் செ.மு.ஆணை ந.க.எண் M3/16361/2019, நாள் 02.07.2017–ன்படி தினஊதியம் அடிப்படையில் மாமன்ற தீர்மான எண் 83, 84, நாள் 30.10.2019–ன்படி முறையே அனுமதி காலம் 30.09.2019 முதல் 26.12.2019 முடிய மற்றும் 24.09.2019 முதல் 20.12.2019 உடன் முடிவடைந்த நிலையில், (அ)–வில் குறிப்பிட்டுள்ள 645 பணியாளர்களுக்கு 29.12.2019 முதல் மேலும் 88 நாட்களுக்கும் (ஆ)–வில் குறிப்பிட்டுள்ள பணியாளர்களுக்கு 23.12.2019 முதல் மேலும் 88 நாட்களுக்கும் மேற்படி சுயஉதவிக்குழு பணியாளர்களை திடக்கழிவு மேலாண்மைப் பணியில் ஈடுபடுத்தவும், அதற்காகும் மொத்த செலவினத்தினை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்றம் அனுமதி வழங்கலாம். மேலும் அவசரம், அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியாளர்களை பணியில் ஈடுபடுத்தியமைக்கு மாமன்றம் பின்னேற்பு வழங்கலாம்.

தீர்மானம் எண் 116

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

**(எச்2/7560/98–மை.அ)**

---

12) திருநெல்வேலி மாநகராட்சி, பாளை மண்டலத்திற்குட்பட்ட மீன்சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2016–2019ம் ஆண்டு காலத்திற்கு நடைபெற்ற ஏலத்தில் திரு.வலம்புரிவேலன் என்பவர் கலந்துகொண்டு, அனுபவிக்கும் உரிமம் பெற்று 3 ஆண்டு காலம் மேற்படி உரிமத்தை அனுபவித்து முடித்துள்ளார். ஏலத்தில் கலந்துகொண்ட போது அன்னார் உரிம ஏலவைப்புத் தொகை ரூ.1,15,000/– (இரசீது எண் 2015313444, நாள் 19.01.2016) மற்றும் கூடுதல் வைப்புத் தொகை முறையே ரூ.1,15,000/– (இரசீது எண் 2015313443, நாள் 19.01.2016), ஆக மொத்தம் ரூ.2,30,000/– செலுத்தியிருந்தார். எனவே அன்னாருக்கு அவர் செலுத்திய வைப்புத் தொகை மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.2,30,000/– காலங்கடந்த வைப்புத் தொகையாக இருப்பதால் திரும்ப வழங்குவது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும்.

அலுவலகக் குறிப்பு

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மண்டலத்திற்குட்பட்ட மீன்சுங்கம் வசூலிக்கும் உரிமத்திற்கு 2016–2019ம் ஆண்டிற்கு நடைபெற்ற ஏலத்தில் கலந்துகொண்டு திரு.வலம்புரிவேலன் என்பவர் உரிமம் எடுத்து நடத்தி வந்தார். மேலும் 3 ஆண்டு கால உரிம காலத்தில் மாநகராட்சிக்கு செலுத்த வேண்டிய உரிமத்தொகை முழுவதும் எவ்வித நிலுவைமின்றி

முறையாக செலுத்தி, உரிமத்தை திரும்ப ஒப்படைத்துள்ளார். எனவே அன்னாருக்கு உரிம காலத்தில் கலந்துகொண்டபோது செலுத்திய வைப்புத் தொகை ரூ.1,15,000/– மற்றும் கூடுதல் வைப்புத் தொகை ரூ.1,15,000/– ஆக மொத்தம் ரூ.2,30,000/–ஐ காலங்கடந்த வைப்புத் தொகையினை திரும்ப வழங்க அனுமதிக்கலாம்.

தீர்மானம் எண் 117

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(அ16913 2016–பாளை)

---

13) திருநெல்வேலி மாநகராட்சியில் கீழ்க்கண்ட 4 துப்புரவு ஆய்வாளர்கள் அயற்பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர். இதில்

(1) திரு.பாலசுப்பிரமணியன் என்பவர் விருதுநகர் நகராட்சியிலிருந்தும் (20.04.2018 முதல்)
(2) திரு.செ.பெருமாள் என்பவர் செங்கோட்டை நகராட்சியிலிருந்தும் (01.09.2018 முதல்)
(3) திரு.கே.அந்தோணி என்பவர் நாகர்கோவில் நகராட்சியிலிருந்தும் (17.04.2018) மற்றும்
(4) திரு.எம்.கருப்பசாமி என்பவர் உணவு பாதுகாப்பு மற்றும் மருந்து நிர்வாகத் துறையிலிருந்து பணி மாற்றம் (08.09.2018 முதல்) செய்யப்பட்டு அயற்பணி அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சியில் பணிபுரிந்து வருகின்றனர்.

மேற்படி 4 துப்புரவு ஆய்வாளர்களும் தங்களை நிரந்தரமாக திருநெல்வேலி மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளராக பணிபுரிய உத்திரவு கேட்டு விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளார்கள். திருநெல்வேலி மாநகராட்சிக்கு அனுமதிக்கப்பட்ட 14 சுகாதார ஆய்வாளர்கள் பணியிடத்தில் 4 சுகாதார ஆய்வாளர்கள், சுகாதார அலுவலர்களாக பதவி உயர்வு செய்யப்பட்டதினால், சுகாதார ஆய்வாளர்கள் பணியிடங்கள் 10 ஆக குறைக்கப்பட்டுள்ளது. இதில் தற்போது 5 சுகாதார ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர். மீதமுள்ள 5 பணியிடங்களிலும் அயற்பணி அடிப்படையில் சுகாதார ஆய்வாளர்கள் பணியாற்றி வருகின்றனர்.

பொது சுகாதாரம் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகளின் அத்தியாவசியத்தை முன்னிட்டு, மேற்படி 4 சுகாதார ஆய்வாளர்களையும், இம்மாநகராட்சியில் நிரந்தர துப்புரவு ஆய்வாளர்களாக நியமிப்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் வழியாக அரசினரை வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு:

மேற்கண்ட விபரங்களின் அடிப்படையில் திருநெல்வேலி மாநகராட்சியில் அயற்பணி அடிப்படையில் சுகாதார ஆய்வாளர்களாக பணிபுரிந்து வரும் (1) திரு.பாலசுப்பிரமணியன் (2) திரு.செ.பெருமாள் (3) திரு.கே.அந்தோணி மற்றும் (4) திரு.எம்.கருப்பசாமி ஆகியோரை நிரந்தரமாக திருநெல்வேலி மாநகராட்சியில் சுகாதார ஆய்வாளர்களாக நியமிப்பது குறித்து நகராட்சி நிர்வாக ஆணையாளர் வழியாக அரசினரை வேண்டி கருத்துரு அனுப்ப மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 118

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(எச்1/ 8703/2011)

---

14) திருநெல்வேலி மாநகராட்சி தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட உபயோகப்படுத்த முடியாத தேவையற்ற சுகாதார பணி தொடர்பான தளவாட பொருட்களை கழிவு செய்யும் வகைக்கு 11.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் மூன்று ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு

| வ. எண் | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | வைப்புத் தொகை விபரம் | ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி |
|---|---|---|---|

| | | | மதிப்புத் தொகை |
|---|---|---|---|
| 1 | M/s செல்வி ஸ்டோர்<br>34/1 வி.கே.ரோடு, மீனாட்சிபுரம்<br>திருநெல்வேலி ஜங்ஷன் | ரூ.920/– செல்லான் எண் 6088, நாள் 11.11.2019 | ரூ.1,00,500/– |
| 2 | M/s பாலமுருகன் ஸ்டோர்<br>1ஏ பெருமாள் மேலரதவீதி<br>திருநெல்வேலி ஜங்ஷன் | --- | ரூ.75,000/– |
| 3 | M/s பேபி ஸ்டெல்லா ஸ்டோர்<br>51இ பெருமாள் கீழரதவீதி<br>திருநெல்வேலி ஜங்ஷன் | --- | ரூ.87,000/– |

மேற்கண்ட மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s செல்வி ஸ்டோர், திருநெல்வேலி நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளி தொகையானது, மற்ற இரு ஒப்பந்தப்புள்ளி தொகையை விடக் கூடுதலாகவும், நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகை ரூ.91676/–ஐ விட ரூ.8824/– கூடுதலாக உள்ளதாலும், M/s செல்வி ஸ்டோர், திருநெல்வேலி நிறுவனம் கொடுத்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மாமன்றத்தின் பார்வைக்கு மற்றும் அனுமதிக்கு

அலுவலகக் குறிப்பு

தச்சநல்லூர் மண்டலத்திற்குட்பட்ட உபயோகப்படுத்த முடியாத, தேவையற்ற சுகாதார பணிக்கான தளவாட பொருட்களை கழிவு செய்யும் வகைக்கு11.11.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், மேலே பொருளில் குறிப்பிட்ட விபரப்படி வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் M/s செல்வி ஸ்டோர், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மற்ற இரு ஒப்பந்தப்புள்ளி தொகையை விடக் கூடுதலாகவும், நிர்ணயிக்கப்பட்ட குறுமத் தொகையை விட ரூ.8824/– கூடுதலாக உள்ளதாலும் M/s செல்வி ஸ்டோர், திருநெல்வேலி நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று மாமன்றம் அனுமதி வழங்கலாம்.

தீர்மானம் எண் 119

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(இ1/2674/2019–தச்சை)

---

15) திருநெல்வேலி மாநகராட்சி மேலப்பாளையம் மண்டலம், வார்டு எண் 34, ஜான்ஹெலன் சிட்டி II, கருங்குளம் பகுதியைச் சார்ந்த ஊர்பொது மக்கள் சார்பாக மேற்சொன்ன பகுதியில் புதிய தெருவிளக்கு அமைத்து தரகேட்டுள்ளார்கள். ஜான் ஹெலன் சிட்டி II பகுதியில் ஏற்கனவே அமைந்துள்ள 14 எண்ணம் மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து 14 எண்ணம் 20 W LED விளக்குகள் பொருத்திடவும் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ஆகியவை சேர்த்து மொத்த உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–த்திற்கு மாமன்றத்தின் அனுமதிக்கும் ஒப்புதலுக்கும்.

அலுவலகக் குறிப்பு

மேற்கண்ட பொருளில் குறிப்பிட்டுள்ள இடங்களில் ஏற்கனவே அமைந்துள்ள 14 மின்கம்பங்களில் தெருவிளக்கு இணைப்பு வயர்கள் அமைத்து அதில் 14 எண்ணம் 20 W LED விளக்குகளை பொருத்தவும் மற்றும் தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) பகிர்மான கழகத்திற்கு செலுத்த வேண்டிய தொகை ஆகியவை சேர்த்து மொத்தம் உத்தேச செலவுத் தொகை ரூ.2,00,000/–த்திற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மானம் எண் 120

அலுவலகக்குறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

(ந.க.எண் இ2/7012/2019–மே.பா.)

---